# உயில் எழுதுவதற்கான உங்கள் வழிகாட்டி

The Law Society

## யார் உயில் எழுதவேண்டும்?

நீங்கள் இறந்த பிறகு உங்கள் சொத்து என்னாகும் என்ற சிந்தனை உங்களுக்கு இருந்தால், நீங்கள் ஒரு உயில் எழுதி வைக்க வேண்டும். உயில் இல்லாவிட்டால், உங்கள் சொத்துக்கள் யாருக்குப் போகும் என்பதை அரசு தீர்மானிக்கும், ஆதலால் உங்கள் நண்பர்கள், உங்களுக்கு விருப்பமான அறக்கட்டளைகள், மற்றும் உறவினர்களுக்கு எதுவும் கிடைக்காமல் போகலாம்.

குறிப்பாக, உங்களுக்கு திருமணம் ஆகியிருக்கவில்லை என்றாலும் அல்லது நீங்கள் ஒருவருடன் சேர்ந்து வாழ்வதாக பதிவுசெய்யப்படவில்லை (ஓரினத் தம்பதியருக்கு மணம்முடித்த தம்பதியருக்கு இருக்கக்கூடிய தகுதியை ஏற்படுத்தித்தரும் சட்டபூர்வ ஏற்பாடு இந்தப் பதிவுசெய்தல் வழிமுறை ஆகும்) என்றாலோ நீங்கள் உயில் எழுதி வைப்பது முக்கியம். ஏனென்றால் கணவன்மார் மனைவிமார், முறைப்படி சேர்ந்து வாழ்பவருக்கு இருக்கக்கூடிய உரிமைகளை இந்த முறையில் (பதிவுசெய்யாமல்) சேர்ந்து வாழ்வோருக்கு இருப்பதாக சட்டம் தானாகவே அங்கீகரிப்பதில்லை. இதன் விளைவாக, நீங்கள் பல ஆண்டுகள் ஒன்றாய் வாழ்ந்திருந்தாலும், நீங்கள் உயில் எதையும் விட்டுச்செல்லாத பட்சத்தில் உங்களுடன் சேர்ந்து வாழ்ந்தவருக்கு எதுவும் கிடைக்காமல் போக வாய்ப்புண்டு.

தங்களைத் தாங்களாகப் பார்த்துக்கொள்ளும் வழியில்லாத பிள்ளைகளோ சார்ந்துள்ளவர்களோ உங்களுக்கு இருக்கிறார்கள் என்றாலும் நீங்கள் உயில் எழுதி வைத்திருப்பது முக்கியம். உயில் இல்லாத பட்சத்தில், நீங்கள் இறந்த பிறகு அவர்களைப் யார் பராமரிப்பார்கள், அவர்களுக்கு யார் பணம் கொடுப்பார்கள் என்பது பற்றி நிச்சயமற்ற சூழல் நிலவலாம்.

உங்களுடைய சொத்துக்கள் மீது எவ்வாறு சொத்துரிமை வரி விதிக்கப்படும் என்பது குறித்தும் சட்டத்தரணியால் ஆலோசனை வழங்கமுடியும்.

**பின்வரும் காரணங்களை முன்னிட்டும் ஓர் உயிர் எழுதிவைப்பது தொடர்பாக சட்ட ஆலோசனை பெறுவது பற்றி நீங்கள் பரிசீலிக்க வேண்டும்:**

- நீங்கள் இறந்த பிறகு உங்கள் சொத்தின் மீது பலரும் உரிமை கோருவார்கள், பண ரீதியாக அவர்கள் உங்களைச் சார்ந்திருந்தார்கள் என்பதனால்;
- உங்கள் உயிலில் ஒரு அறக்கட்டளையை உள்ளடக்க நீங்கள் விரும்பினால் (இளம் குழந்தைகள் அல்லது ஊனமுற்ற ஒருவரின் பராமரிப்பிற்காகவோ, வரி மிச்சம் செய்வதற்காகவோ அல்லது நீங்கள் இறந்த பின்னர் உங்கள் சொத்துக்களை ஏதாவது வகையில் வெறுமனே பாதுகாப்பதற்காகவோ);
- உங்கள் நிரந்தர வீடு ஐக்கிய ராஜ்ஜியத்தில் இல்லை என்றாலோ நீங்கள் பிரித்தானியப் பிரஜை இல்லை என்றாலோ;
- நீங்கள் இந்த நாட்டில் வாழ்கிறீர்கள் ஆனால் உங்கள் சொத்துக்கள் வெளிநாட்டில் இருக்கின்றன என்றால்; அல்லது
- ஒரு தொழில் நிறுவனத்துக்கு நீங்கள் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ சொந்தக்காரராக இருக்கிறீர்கள் என்றால்.

நீங்கள் ஒரு உயில் எழுதிய பிறகு, உங்கள் வாழ்க்கை சூழ்நிலையில் சில மாற்றங்கள் நிகழ்கிறது என்றால் – உதாரணத்துக்கு திருமணம், சேர்ந்து வாழ்தல், பிரிந்து வாழ்தல், விவாகரத்து அல்லது நீங்கள் சேர்ந்து வாழ்வது சட்டப்படி முடிவுக்கு வருகிறது போன்றவை – அந்த உயில் முழுமையாகவோ அல்லது அதில் ஒரு பகுதியோ செல்லாது அல்லது போதுமானதாக இல்லாமல் போகும். ஆதலால் நீங்கள் எழுதிய உயிலை உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் முக்கிய மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றி வரவேண்டும். என்னென்ன வாழ்க்கை மாற்றங்கள் நிகழ்ந்தால் உங்கள் உயிலை மாற்றி எழுதவேண்டுமென சட்டத்தரணியால் கூறமுடியும்.

## சட்டத்தரணியைப் பயன்படுத்துதல்

சட்டத்தரணி ஒருவரின் உதவி இல்லாமலே உயில் எழுதுவது சாத்தியம்தான் என்றாலும், அந்த உயிலை சட்டப்படி செல்லுபடி ஆக்குவதில் பல்வேறு சட்ட நடைமுறைகள் இருப்பதால், சட்டத்தரணி இல்லாமல் உயில் எழுதுவது நல்லதல்ல. நிபுணர் ஒருவரின் உதவி இல்லாமல் நீங்கள் அதைச் செய்யும்போது, ஏதாவது பிழைவிட நிஜமான வாய்ப்பு இருக்கிறது. அது நடந்தால், நீங்கள் இறந்த பிறகு உங்கள் உறவினருக்கும் நண்பர்களுக்கும் அது பிரச்சினையாய் அமையலாம்.

## சட்டத்தரணி ஒருவரைக் கண்டறிதல்

நீங்கள் உயில் எழுத நினைக்கிறீர்கள், ஆனால் உங்களுக்கென சட்டத்தரணி கிடையாது என்றால், www.lawsociety.org.uk/findasolicitor என்ற எமது இணையதளத்தில் 'Wills and Probate' என்ற தலைப்பின் கீழ் உங்கள் வட்டாரத்தில் இருக்கும் சட்டத்தரணிகளைத் தேடவும். மாறாக 0870 606 2555 என்ற தொலைபேசி இலக்கத்தையும் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

## உங்கள் சட்டத்தரணி அறிய வேண்டியவை யாவை

சட்டத்தரணி ஒருவரை நீங்கள் நியமித்த பின்னர், பின்வரும் விடயங்களை அவர் உங்களிடம் இருந்து தெரிந்துகொள்ள வேண்டிவரும்.

**உங்களது சொந்தமானவை**

உங்களது அசையாச் சொத்துக்கள், கார்கள், மற்ற பொருட்கள், நிறுவன பங்குகள், வங்கிச் சேமிப்புகள், காப்பீட்டு ஒப்பந்தங்கள், மற்றும் உங்களுக்கு சொந்தமான தொழில் நிறுவனங்கள் மற்றும் ஓய்வூதிய ஒப்பந்தங்கள் உள்ளிட்டு உங்களுக்குச் சொந்தமான அனைத்து விஷயங்களையும் தெரியப்படுத்த வேண்டும்.

**யாருக்கு என்ன கிடைக்கும்?**

இந்தச் சொத்துக்களை யார் யாரிடம் கொடுக்க நீங்கள் விரும்புகிறீர்கள்? உங்கள் நேசத்துக்குரியவர்கள், நண்பர்கள் மற்றும் அறக்கட்டளைகள் இடையே உங்களது சொத்துகளை எவ்வாறு பங்குபோட நீங்கள் விரும்புகிறீர்கள்? சொத்து கொடுப்பது தொடர்பில் ஏதேனும் நிபந்தனைகளை விதிக்க நீங்கள் விரும்புகிறீர்களா (உதாரணத்துக்கு, வயது வராத ஒருவருக்கு நீங்கள் விட்டுச் செல்லும் பணம் அவர் ஒரு குறிப்பிட்ட வயதை எட்டியவுடனேயே வழங்கப்பட வேண்டும் என்பது போன்றவை)?

**குடும்பத்தினர் மற்றும் பிற பயனீட்டாளர்கள்**

உங்கள் குடும்பம் மற்றும் பிற சூழ்நிலை குறித்த விபரங்கள், உங்களுக்கு விவாகரத்து ஆகிவிட்டதா அல்லது ஒருவருடன் சேர்ந்து வாழ்ந்த நிலை சட்டப்படி ரத்தாகிவிட்டதா? நீங்கள் மறுமணம் புரிந்துகொண்டீர்களா அல்லது வேறு ஒருவருடன் சேர்ந்து வாழுகிறீர்களா? அல்லது திருமணம் செய்யாமலோ, சட்டப்படி பதிவு செய்யாமலோ ஒருவருடன் சேர்ந்து வாழ்கிறீர்களா? உங்களுக்கு பிள்ளைகளோ உங்களைச் சார்ந்திருக்கும் பிறரோ இருக்கிறார்களா? பொருளாதார ரீதியில் உங்களைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள் நீங்கள் எழுதிய உயிலில் தங்களுக்கு போதுமான அளவு சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்கச் சொல்லி நீதிமன்றத்திடம் கேட்கமுடியும். சம்பந்தபட்ட விபரங்களை நீங்கள் சட்டத்தரணியிடம் கொடுக்கும்போது, சட்டச் சிக்கல்கள் இருக்கிறதா என்று அவர் கூற முடியும்.

**குழந்தைகளின் பொறுப்பாளர்கள்**

நீங்கள் இறக்கும் சமயத்தில் உங்களுக்கு 18 வயது பூர்த்தியாகாத பிள்ளைகள் இருக்குமாயின், அவர்களின் சட்டபூர்வ பொறுப்பாளர் யார் என்பதை நீங்கள் தெரியப்படுத்த வேண்டும்.

**மற்ற விருப்பங்கள்**

உங்களது இறுதிச் சடங்குகள் தொடர்பாக குறிப்பிட்ட விருப்பங்கள் எதுவும் உங்களுக்கு உண்டா? புதைக்கப்படுவதா எரிக்கப்படுவதா இதில் உங்கள் விருப்பம் என்ன? மற்ற விஷயங்கள் ஏதேனும் தேவையா? உதாரணத்துக்கு, உடலுறுப்பு தானம் செய்ய நீங்கள் விரும்பினால், அதை உயிலில் குறிப்பிட முடியும். இருந்தாலும் உடலுறுப்பு தான பதிவேட்டில் பதிந்துகொள்வதோ உடலுறுப்பு தான அட்டை பெற்றிருப்பதோ நல்லது.

**உங்கள் உயிலை நிறைவேற்றுவோர்**

உங்களது உயிலை நிறைவேற்றுபவர்கள் – அதாவது நீங்கள் இறந்த பின்னர் உங்கள் உயிலை செயல்படுத்தப்போகிறவர்கள் யார் என்றும் நீங்கள் குறிப்பிட வேண்டும். உங்கள் குடும்ப உறுப்பினரோ நண்பரோ அல்லது உங்கள் சட்டத்தரணி போன்ற ஒரு தொழில்முறை நிபுணரோ நிறைவேற்றுபவராக செயலாற்றலாம். நிதி விவகாரங்களை அறிந்தவராக அவர் இருந்தால் நல்லது. நிறைவேற்றுபவராக நீங்கள் நியமிக்க இருப்பவரிடம் அப்பொறுப்பை அவர் ஏற்கத் தயாரா என்று கேளுங்கள், ஏனெனில் இந்தப் பணியில் அவருக்கு நெடுநாளைய பொறுப்புகள் இருக்கும், அதிலும் குறிப்பாக ஒரு அறக்கட்டளை சம்பந்தப்பட்டிருந்தால் நெடுநாளைய பொறுப்புகள் இருக்கும். உங்களைவிட வயது குறைந்த ஒருவரை நிறைவேற்றுபவராக நியமிப்பது பொதுவாக நல்ல யோசனை.

## உயிலில் கையெழுத்திடுவது

உயில் எழுதிய பிறகு அதில் நீங்கள் கையெழுத்திடாதவரை அது செல்லாது. கையெழுத்திடுவதில் சில விதிமுறைகள் இருக்கின்றன, அவற்றை ஒழுங்காக கடைப்பிடிக்கவில்லை என்றால் உயில் செல்லாது போகும். உதாரணத்துக்கு, உயிலுக்கு சாட்சியாக அமைந்திருப்பவர்களோ அவரை மணம்முடித்தவர் அல்லது சேர்ந்து வாழ்பவர் அந்த உயிலின் பயனீட்டாளராக இருக்க முடியாது. இந்தப் பிரச்சினையைத் தவிர்ப்பதற்காக சட்டத்தரணி அலுவலகத்தில் பணிபுரிவோரைப் பலர் சாட்சிகளாகப் போடுவார்கள்.

# உயில் எழுதுவதற்கான உங்கள் வழிகாட்டி

The Law Society

## உயிலை எங்கே வைப்பது

உங்கள் உயிலை ஒரு இடத்தில் பத்திரமாக வைத்து அது எங்கே என்பதை நிறைவேற்றுபவர் அல்லது ஒரு நெருங்கிய நண்பர் அல்லது உறவினரிடம் தெரிவிக்கவேண்டும். பலர் உயில்களை சட்டத்தரணிகளிடமே கொடுத்து வைத்துக்கொள்ளச் சொல்லுவார்கள். பல சட்டத்தரணிகள் அதை இலவசமாக செய்வார்கள், சிலர் அதற்கு சிறிய அளவில் கட்டணம் கேட்பார்கள்.

## உங்கள் உயிலை வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப மாற்றி வருவது

குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையோ அல்லது வாழ்க்கையில் பெரிய மாற்றங்கள் நிகழும்போதோ உயிலை திருத்தி எழுத வேண்டும். விவாகரத்து பெறுதல், பிரிந்து வாழ்தல், மணம் முடித்தல், பிள்ளை பெறுதல் அல்லது வீடு மாறுதல் உள்ளிட்ட வாழ்க்கை மாற்றங்கள் இதில் அடங்கும். பெரிய மாற்றம் நிகழுமானால் புதிதாக ஒரு உயிலை எழுதுவது நல்லது. இருக்கும் உயிலிலேயே சிறிய மாற்றங்கள் (கோடிசில் எனப்படும்) செய்யலாம். எதுவாக இருந்தாலும் ஒரு சட்டத்தரணியை கலந்தாலோசிப்பது நல்லது.

## செலவுகள்

உயில் எழுதுவதற்கான கட்டணம் சட்டத்தரணியைப் பொறுத்து மாறுபடும். பின்வருவனவற்றைப் பொறுத்தும் கட்டணம் மாறுபடும்:

- சட்டத்தரணியின் அனுபவம் மற்றும் தகவல் அறிவு; மற்றும்
- உயிலின் தன்மை - அதில் அடங்கும் விஷயங்கள்.

யாரைப் பயன்படுத்துவது என்று முடிவுசெய்வதற்கு முன், உங்கள் வட்டாரத்தின் சில சட்டத்தரணிகளிடம் அவர்கள் எவ்வளவு கட்டணம் பெறுகிறார்கள் என்று தெரிந்துகொள்ளவும். ஆனால் கட்டணத்தின் அளவை மட்டும் வைத்து ஆளை முடிவுசெய்யாதீர்கள். நீங்கள் எளிதில் அணுகக்கூடிய, நீங்கள் புரிந்துகொள்ளும்படியான ஆலோசனைகளை வழங்கக்கூடியவர்களை நியமிப்பதென்பதும் அதே அளவு முக்கியம்.

## கூடுதல் தகவல்

சட்டத்தரணிகள்  வழங்கக்கூடிய பொதுவான சேவைகள் பற்றிய பிரசுர வரிசையில் ஒன்று இது. இந்த வரிசையிலுள்ள மற்ற பிரசுரங்களின் பட்டியல் கீழே தரப்படுகிறது. உங்களது சட்டத்தரணியிடம் இருந்தும் அல்லது இங்கிலாந்து மற்றும் வேல்ஸ்சுக்கான சட்ட சங்கத்தை 0870 3333 084 என்ற இலக்கத்தில் அழைத்தும் நீங்கள் இவற்றைப் பெறலாம்.

- வீடு வாங்குவதற்கான உங்கள் வழிகாட்டி
- விவாகரத்து பெறுவதற்கான வழிகாட்டி
- வேலையிடப் பிரச்சினைகள் குறித்த உங்கள் வழிகாட்டி
- தொழில் தொடங்குதற்கான உங்கள் வழிகாட்டி
- அடிபட்டதற்கு நஷ்டஈடு வாங்குவதற்கான உங்கள் வழிகாட்டி
- வயோதிகர்களின் நிதி விவகாரங்கள் குறித்த உங்கள் வழிகாட்டி
- வாழ்க்கைத் துணையுடன் சேர்ந்து குடும்பம் நடத்துவதற்கு தேவையான உதவிகள் பற்றிய வழிகாட்டி
- வீடு வாடகைக்கு விடுவதற்கான உங்கள் வழிகாட்டி
- வீடு வாடகைக்கு எடுப்பதற்கான உங்கள் வழிகாட்டி
- சட்டத்தரணி ஒருவரை நீங்கள் பயன்படுத்துவதற்கான வழிகாட்டி
- ‘ப்ரொபேட்’ எனப்படும் உயிலுக்கான நீதிமன்ற அங்கீகாரம் பெறுவதற்கான உங்கள் வழிகாட்டி
- தஞ்சம் கோருவதற்கான உங்கள் வழிகாட்டி

**பெரிய எழுத்துக்களைக் கொண்டு அச்சடிக்கப்பட்ட வடிவிலும், பார்வையற்றோர் படித்து அறியக்கூடிய பிரெய்லி எழுத்து வடிவிலும், குறுந்தகடு வடிவிலும் இந்த வழிகாட்டி கிடைக்கும். இதில் ஒன்று உங்களுக்கு வேண்டுமென்றால் accessibility@lawsociety.org.uk என்ற மின் -அஞ்சல் முகவரியையோ அல்லது 0870 606 2555 என்ற தொலைபேசி இலக்கத்தையோ தொடர்புகொள்ளவும்.**

**வேறு பல மொழிகளிலும் இந்த வழிகாட்டி கிடைக்கும். www.lawsociety.org.uk என்ற எங்கள் இணைய தளத்திற்குச் சென்று நீங்கள் அவற்றைப் பெறலாம்.**

Lexcel

Look for Lexcel - the mark of excellence



துல்லியமான விபரங்களை வழங்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் எடுத்துள்ளோம் என்றாலும், சட்டம் என்பது தொடர்ந்தும் மாறிவருகிறது, ஒவ்வொருத்தருக்கும் அது வெவ்வேறு வகையில் பொருந்துகிறது என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். உங்கள் சூழ்நிலைக்கான குறிப்பிட்ட ஆலோசனைக்கு எதுவும் ஈடாகாது. ஆகவே இந்தப் பிரசுரத்தை மட்டும் நீங்கள் சார்ந்திருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.

Designed by dmlmarketing.co.uk Version 2, 2007 Your guide to making a will - Tamil